கண்படைத்த பயன் கண்ணபுரத்தைத் தரிசிப்பதே என்பது இப்பெண்பிள்ளை பேச்சாகும்.

இனிப் பாணனார் திண்ணம் இருக்க இனி இவள் நாணுமோ - பழக்கத்தால் ஏற்பட்ட ஈடுபாட்டைச் சொல்லுகிறாள். பாணனார் - தலைவன், தலைவியைப் பரத்தை காரணமாகப் பிரிந்தால் அப்பொழுது தலைவிக்கு ஏற்படும் கோபத்தைப் போக்கி மீண்டும் தலைவன் தலைவியைக் கூடுவதற்கு வாய்ப்பினை உண்டாக்கும் வாயிலாகப் பாணனைத் தலைவியிடம் அனுப்புவான். பாணனும் தன் இன் சொற்களாலே தலைவியின் கோபத்தைப் போக்கித் தலைவன் அவளைக் கூட வாய்ப்பு உண்டாக்குவான். இங்குப் பாணனார்ஆகின்றவர் அறிவுமயமான ஆன்மாக்களுக்குத் தன் உரிமையால் வந்த குறையைப் போக்கி அவர்கள் ஆண்டவனுடைய அடிமைகள் என்ற அறிவை உணர்த்தி அவர்கள் எம்பெருமானொடு சேர்வதற்கு வாய்ப்பினை உண்டாக்கும் ஆசாரியர்களே ஆவர். இப்பெண்பிள்ளை 'பாணனார்' என்கிறாள், பேராளன் பேரோதும் பெரியோர் (பெ.634) என்று தன் மகள் சொல்லக் கேட்டவள் ஆகையாலே. மகள் சொல்லத் தாய் கேட்டாள் என்று இறைவனைப் பற்றிய திறத்தில் அமைவதில் குறைவு ஒன்றுமில்லை. உலகியல் செய்திகளில் தாய் சொல்ல மகள் கேட்டல் முறை. தெய்விகச் செய்திகள் உயிருக்கு உறுதி பயப்பன ஆதலின் யாவர் சொன்னாலும் யாவரும் கேட்கலாம். 'ஸமித் பாணிச் ச்ரோத்ரியம் ப்ரஹ்ம நிஷ்டம்' - (கையில் சமித்துக்களைக் கொண்டு வேதம் அறிந்தவனாய் ப்ரஹ்மத்தில் ஈடுபட்ட ஆசாரியன்) என்கிறபடியே மிகவும் ஈடுபட்டிருக்கும் இதுவேயன்றோ வேண்டுவது?

திண்ணம் இருக்க - இறைவன் அடியார்கள் அசைக்க முடியாத உறுதியுடையராய் அவள் உள்ளத்தில் இருக்க, என் மகள் தன் சொல்செயல்களில் அசைக்க முடியாதவளாய் நான் என் சொற்களால் அடக்கியாள முடியாத கடந்த நிலையில் இருக்கிறாள். இப்படி இடைவிடாமல், நான் அறிவுரைகளை இவள்மனம் கொள்ளுமளவு முயன்று கூறினாலும், இவள் தன் நிலையிலிருந்து மீண்டு எங்கள்பக்கம் வருவது என்பது ஒன்று நிகழக்கூடியதாய் இல்லை. இனி இவள் நாணுமோ - தொடர்பினால் ஏற்பட்ட ஈடுபாட்டாலும் இவள் என்பக்கல் மீளமாட்டாள்; தன்னிடம் இயல்பாக உள்ள ஈடுபாட்டாலும் இவள் எம்பக்கலே மீள மாட்டாள். "உனக்கு இந்த அளவு கடந்த ஈடுபாடு தகாது" என்று என் மகளுக்கு உபதேசம் செய்கிற நான், அது பலிக்கவில்லை என்று வெட்கப்பட்டு, என் உபதேசம் பயன் தாராமை குறித்து வெட்கி மீள்வது தவிர இவள் தன் செயலுக்கு வெட்கி மீள்வதாகத் தோன்றவில்லை. இவளுக்கு ஆசாரியனாலும் ஒன்றும் செய்யலாவதில்லை. இப்பெண்பிள்ளை இயல்பாகவே உயர்ந்த இயல்பினள் அல்லளாயின், இவள் தானும் அறிய வேண்டியதாயிருக்கும்; நமக்கும் இவளுக்கு உபதேசம் செய்ய வேண்டி இருக்கும்.

நன்று நன்று நறையூரர்க்கே - இனி என் விருப்பம் ஈடேறவில்லை. இவளுடைய செயலும் இருக்கச் சவரிப்பெருமாள் கருதிய செயலும் இருக்க, தொடக்கத்திலேயே இவளுக்கு மடல் எடுத்தாகிலும் எம்பெருமானைத் தவறாமல் அடைய வேண்டும் என்ற இயல்பான மேம்பட்ட ஞானத்தைக் கொடுத்து, எங்கள் சொற்களுக்குக் கீழ்ப்பட்டு நடக்காதவளாக இவளைச் செய்து, எங்களை மறந்து தன்னை நோக்கியே புறப்படவிட்ட அந்தத் திருநறையூர் எம்பெருமான் திட்டமிட்டுச் செய்த செயலே நிறைவேறிவிட்டது அன்றோ? - என்று தாய் வருந்திக் கூறுகிறாள். பாணனார் - இருபொருள் காண்க. (712)